# சிலுவை பாதை தொகுப்பு

கல்வாரிக் குன்றில் காணிக்கையானவா
சிலுவை மரத்தில் வாழ்வு சொன்னவா
என் இதய அதிர்வுகள்
அது உனது பாதப் பதிவுகள்
உனது பாதப் பதிவுகள்

கழுமரம் எங்காவது பூப் பூக்குமா?/ பூத்தது/, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்/ கல்வாரிக் குன்றிலே/ கழுமரத்திலே/ வானகதிற்கும் வையகத்திற்கும் நடுவே/ ஒரு மனிதப் பூ/ மலர்ந்தது/. குருதியில் குளித்த அந்த பூதான்/ இயேசு பெருமான்/. அக்கிரமக்காரர்களின்/ அநியாயக்காரர்களின்/ கதைகளை முடிப்பதற்காக/ நிமிர்ந்த சிலுவை/ அன்று ஒரு அவமானச் சின்னம்/ இயேசு பெருமான் அந்த சிலுவையை சுமந்ததால்/ அதில் மரணத்தைத் தழுவியதால்/ ஒரு அவமானச் சின்னம்/ ஆராதனைக்குறியச் சின்னமாக ஆனது/. சண்டாளர்களும் பழித்த/ ஒரு சிலுவையின் முன்னால்/ சக்கரவர்த்திகளும் மண்டியிட்டார்கள்/. உழுத நிலம் போல/ அந்த சிலுவையில் கிடந்த உடல்/ அதை நினைக்கிறவர்களின் உள்ளங்களை எல்லாம்/ இன்றைக்கும் உழுதுகொண்டே இருக்கிறது/. நாடு கடந்து வந்த நதியான/ இயேசு பெருமானின் பாடுகளை/ குறிப்பாக அவர் சிந்திய இரத்தத்தை/ நெஞ்சிலே வைத்து/ நினைவிலே போற்றுகிற பெருமக்கள்/ பேறுபெற்றவர்கள்/. இந்த சிலுவை பாதையில்/ கலந்துகொண்டும்/, கலந்து கொள்ள முடியாமல் போன/, இயேசுவின் பாடுகளை தியானிக்கின்ற ஒவ்வொருவரின் உடலிலும்/, உள்ளத்திலும்/ இயேசுவின் ரத்தம் கலந்து பாய்ந்து/ அனைவரது வாழ்க்கையையும்/ வரலாறு ஆக்கட்டும்.
இப்போது கண்முன்னே விரிகிறது கல்வாரி.

இறைவன்/ தனது இருக்கையிலிருந்து கற்பிக்கிற வேதம்/ மனிதனின் இதயத்தில் நுழைய மறுத்தபோது/ இறைவனே இறங்கி வந்து வேதமானார்/ சிலுவை மரத்தில்/ பாடமானார்/. வருடம் தோறும் வந்து போகிற தவக்காலம்/ இயேசுவிற்காக கண்ணீர் வடிக்கின்ற/ அழுகை காலமல்ல/ வறியோரின் கண்ணீர் துடைக்கின்ற கருணை காலம்/ இது வருத்தம் கொள்கின்ற நாட்கள் அல்ல/ வாழ்வில்/ திருத்தம் எற்படுத்திகொள்கிற நாட்கள்/ சிலுவை பாடுகளை சிந்திக்கின்றபோது/ கல்வாரிக்குன்றில் காயப்பட்ட இயேசுவோடு/ கைக்கோர்த்துகொண்டு நடக்கிறதுபோல் இருக்கிறது/. வாருங்கள் சேர்ந்து நடப்போம்.

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய் |
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ? | - 2

உனது பாத பதிவுகள், எனது வாழ்வின் வேதங்கள்
உனது பாத பதிவுகள், எனது வாழ்வின் வேதங்கள்
**இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்**

**(1)**

வறியவரின் வழக்குகளில் நீதிமன்ற தீர்ப்புகளில்
நீதி இல்லையே, வறியோர் ஜெயிப்பதில்லையே!
இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

## 01. முதல் பதிவு - இயேசுவிற்கு சிலுவை தீர்ப்பு

நீதி மன்ற தீர்ப்பு/. இது/ வளியோருக்கு வசதியாக வளைகிற தென்னங்கீற்று/. சிபாரிசுக்கு ஆளில்லாததால்/ இயேசுவிற்கு இந்த சிலுவை தீர்ப்பு/. மேல் முறையீட்டு கதவுகளே அமைக்கப்படாத கறுப்புத் தீர்ப்பு/. நடைமுறையில்/ வறியவரின் வழக்கென்றால்/ நீதிமன்ற வாதத்திர்க்குகூட/ முடக்கு வாதம் வந்து விடுகிறது/. பொய் சாட்சி சொல்ல/ வாடகை மனிதர்கள்/ வரிசையில் நிற்கிறார்கள்/. நீதியின் கண்களை கட்டிக்கொண்டு/ விறகில் வெண்ணை தேடுகிற/ கண்துடைப்பு விசாரணைகள்/. விசாரணைகளுக்குப் பிறகு தீர்ப்பு எழுதுவது/, உலகில் வழக்கு/. ஆனால்/, இயேசுவின் வழக்கில் மட்டுமே/ தீர்ப்பு எழுதபட்டபிறகே/, விசாரணைகள் கண் விழிக்கின்றன/. அரசியல்வாதியின் தீர்ப்பு/, இலட்சியவாதியின் முன்/ முனை முறிந்து போகும்.

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(2)**

செம்மறிபோல் பழி சுமந்து சிலுவைமரம் தோளில் ஏற்றி
நடந்து போகிறார், உலகை நடத்த போகிறார்..

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

## 02. இரண்டாம் பதிவு - இயேசுவின் தோளில் சிலுவை

குற்றவாளி சிலுவை சுமப்பதுண்டு/. சிலுவையை சுமப்பதினால்/ ஒருவர் குற்றவாளி ஆகிவிடமுடியாது/. இலட்சிய போராளிகளுக்கு/ சிறைக்கூடம் கூட/ பள்ளிகூடம்தான்/. தியாகிகளை அடைக்காத்ததால்தான்/, சிறைச்சாலைகளுக்கேச் சிறப்பு கிடைத்தது/. இயேசு சுமந்ததால்தான்/, சிலுவைக்கே சிறப்பு வந்தது/. சிலுவை/, இது இரண்டு மரத்துண்டுகளின் இணைப்பு அல்ல/. விண்ணையும், மண்ணையும்/ இணைக்க வந்த உறவுக்கோடு/. இயேசுவின் சிலுவை/ உலகிற்கு மீட்பானது/. இன்றைக்கு எத்தனை எத்தனை சிலுவைகள்/, அடக்குமுறைகள்/, அடிமைத்தனங்கள்/, சுரண்டல்கள்/, சாதி மத

மோதல்கள்/, வறுமை/, பட்டினிகள்/. உலகில் தோளில் உட்கார்ந்திருக்கிற இந்த சிலுவைகளை இறக்கி வைத்திட/, மனிதர்களே எழுந்து வாருங்கள்.

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(3)**

மரச்சிலுவை உடலழுத்த, மனச்சிலுவை நெஞ்சமுழுத்த
தரையில் விழுகிறார், தனியே தனக்குள் அழுகிறார்.

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

## 03. **மூன்றாம் பதிவு - இயேசு முதல் முறை தரையில் விழுகிறார்.**

வாழ்க்கை என்பது/ ஒரு தடகள ஓட்டம்/. இந்த ஓட்டத்தில் வென்றிட/, விழுவதுகூட/ வெற்றி முயற்சிதான்/. விழுவதால்தான் வீரனுக்கே விலாசம் கிடைக்கிறது. தாயகம் காக்கக்/ காயபடுவதும் வீரம்தான்/. இலட்சிய வீரன் இடறி விழுகிறபோது/, இலட்சியம் எழுந்து நிற்கிறது/. இலட்சியம் விழுந்து விட்டால்/, வரலாறே வடுபட்டுவிடும்/. இயேசு விழுந்தாலும்/, இயேசுவின் இலடச்சியங்களுக்கு/ எந்த சேதாரமும் இல்லை/. அழகையின் ஆசை வார்த்தைகள்/, அப்பம் உண்டவர்களின்/ அலங்காரக் கோரிக்கைகள்/, சீடர்களின் சிங்கார கனவுகள்/. இவைகளால்/ இயேசு தடுமாறியதே இல்லை/. சலனங்களை சமாளித்துவிட்டால்/, வானமே வசப்படும்/. வேங்கையோடு மோத வேண்டிய நீ/, ஆந்தையின் அலறலைக் கண்டு/ அரண்டுவிடலாமா?

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(4)**

அன்னைமரி விடை கொடுக்க, கண்ணீர் துளி இடைமறிக்க
உறவு தடுத்தது, அங்கே கடமை ஜெயித்தது.

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

04. **நான்காம் பதிவு - இயேசு தன் அன்னையை சந்தித்தல்.**

வாழ்க்கைக்கு அர்த்தம் சொல்லுகிற அகராதி/ "அம்மா"/. அம்மாவின் ஆசி மட்டும் ஒருவருக்கு கிடைத்துவிட்டால்/, உலக உருண்டையே அவர் உள்ளங்கைகளில்/ உருளுகிற/ கோளிகுண்டுதான்/. அன்னை/ மாற்று குறையாத தங்கம்/. அவளுக்கு மாற்றாக/ உலகில் ஏதும் இல்லை/, அவள் ஊட்டுகின்ற பாலில்/ வீரம் கரைந்து இருக்கும்/. தியாகம் நிறைந்து இருக்கும்/. பாசம் உறைந்து இருக்கும்/. அன்னை மரியாள்/ இயேசுவிற்குக் கிடைத்த/ அற்புத புதையல்/. தம் திட்டத்தை செயல்படுத்த/ இறைவனே தேடி எடுத்த/ மாணிக்கப் பெட்டகம் அல்லவா?/ தன் உள்ளத்தை வாள் ஊடுருவினாலும்/, உலகத்தை விடுதலை ஊடுருவ வேண்டும் என்ற கனவு வரிகளை/ விழிகளில் எழுதி/ கல்வாரிக்கு/ மகனை அனுப்பி வைக்கிறாள்/. இனி/ எல்லாத் தலைமுறையும்/ இவளை பேருடையாள்/ என்றுதானேப் போற்றும்

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.



தோழமைதான் வாழ்கையே, தோள்க் கொடுத்தால் பிறக்கும் வழி
சீமோன் வடிவிலே, உதவி உதயமானதே

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

05. **ஐந்தாம் பதிவு - இயேசுவிற்கு சீமோன் தோள் கொடுத்தல்.**

பாரமுள்ள சிலுவைகள் நடுவிலும்/,நெஞ்சில் ஈரமுள்ள மனிதர்கள் உணடு என்பதும் உயர்ந்த உதாரணம்/ சீமோன்/. தோழமை/ தோள் கொடுப்பதிலே தொடங்க வேண்டும்/. வாய்மொழியோடு நின்றுவிட்டால்/, வகையற்று போய்விடும்/. பளபளக்கிற பாதரசச் சொற்கள்/ சராசரிகளுக்கு உண்ணுகிற/ பருக்கைகள் ஆவதில்லை/. ஊருக்கெல்லாம் அறிவித்துவிட்டு செய்கிற விளம்பர உதவிகளைவிட/, ஆபத்தில் உதவுவது/ சிறப்பானது/. தாய்ப்பாலே விளையாகிப்போன உலகில்/, வசதி இருக்கிறபோது மொய்ப்பதும்/, வறுமையாகிரபோது ஓடுவதும்/ உறவின் இலக்கணம் என்றாகிவிட்டது/. காசு வாங்காமலே வீசுகிற காற்றைப்போல/, பலனைப் பாராமல் பணியை செய்தால்/, சீமோனைப் போல/ சிறக்கலாமே.

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

போதும் அன்பு துள்ளி எழ, குருதி வெள்ளம் கோலமிட
துடைத்தாரோறிக்கம் அவர் மனித மாணிக்கம்.

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

06. **ஆறாம் பதிவு - இயேசுவின் முகத்தைத் துடைக்கும் வெரோனிக்கா.**

தூசு படிந்த கண்ணாடிபோல்/ இயேசுவின் முகம்/. உலக அழுக்குகளின் அடையாளமாய்/, இயேசுவின் முகத்தில்/ ரத்தமும் வியர்வையும் இடம்பிடித்துகொள்கின்றன/. முகத்தை மூடிகொல்கிற பிற்போக்கு சமுதாயத்தில்/, முகில் விடுத்து/ விழிக்கிளம்பும் முற்போக்கு முழுமதியாய்/, இயேசுவின் முகத்தைத் துடைக்கும் பெண்ணிலவு/ வெரோனிக்கா/. மண்ணுக்குத் தருகிற மரியாதைக்கூட/ பெண்ணுக்குத் தருவதில்லை/. இறைவன் மீட்டிய சங்கீதத்தில்/ தாளம் தப்பிய ராகங்களா இந்த பெண்கள்/. பெண்/, இவள் தெய்வீகத்தை மானுடத்தில் மொழி பெயர்கிறவள்/. இவள்/ பூமிக்குள் புதைந்து கிடக்கிற எரிமலை/, குழம்புகள் எழுந்தால்/ பிரபஞ்சம் தாங்காது/. வெரோனிக்கா வரப்புகளை உடைத்த வரலாற்று நதி/. கரைகளைப் பற்றி கவலைப்படாமல்/, பாய்ச்சல் சுவடுகளை பயணப் பாதையாய் ஆக்கிகொண்டவர்/. பெண்களுக்கு வெளிப்போட நினைக்கும் போலிகளே/, காற்றுக்கு கை விலங்கு போட முடியாது.

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(7)**

சோதனைகள் தொடர்ந்து வர, சோர்ந்து விழும் மானிடர்கள்
பாடம் பயின்றிட, இயேசு விழுந்து எழுகிறார்

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

07. **ஏழாம் பதிவு - இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்.**

காயமும் களைப்பும்/, இயேசுவை கீழே தள்ளிவிட்டன/. சமூக மாற்றம் தேடுவோர்/, தடுமாற்றம் கொள்வது இயல்பானது/. காரணம்/, சோதனைகளில் இருந்துதான்/ சாதனையாளன் எழுகிறான்/. வருத்தங்கள் என்பவை/, வாழ்வில் திருத்தங்களை ஏற்படுத்த/ இறைவன் தருகிற வாய்ப்புகள்/. வீழ்ச்சிக்குக் கணக்குப் பார்கிறவன்/, எழுச்சியை எண்ணிப் பார்க்க இயலாது/. இரண்டாம் முறை விழுந்துவிட்டோம்/ என்று இயேசுவுக்கு எண்ணம் எழவில்லை/. எழுவதைப் பற்றியே அவருக்கு எண்ணம்/. தோல்விகள் தொடரும்போது/, வாழ்வு சோகத்தில் முடிகிறது/. நெருக்கடிகள்

நேரக்கூடாதென்று/ மனம் மன்றாட்டு வாசிக்கிறது/. நெருக்கடிகள் மனிதரை நெறிப்படுத்துபவை/. காட்டாற்று வெள்ளத்தில் காயப்படுகிறக் கூழாங்கல்/, சீவப்பட்ட சிங்காரக்கல்லாய்/ மேசையில் அமர்வதை/ நீ பார்த்ததில்லையா?

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(8)**

விழிகளிலே நீரெழுதி கருணை மொழி தந்த பெண்கள்
நேசம் ஏற்றிட்டார், இயேசு தேற்றி அனுப்பினார்

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

## 08. எட்டாம் பதிவு - இயேசுவுக்கு எருசலேம் பெண்கள் தந்த ஆறுதல்.

ஆறுதல்/, இது வார்த்தைக்கு வசப்படாத இதயத்தின் முனகல்/. எருசலேம் நகரத்து பெண்களின் உள்ளத்தில் உதயமாகி/, விழி வெள்ளத்தில் நீச்சல் அடிக்கிற கருணையின் மொழியை/, காயப்பட்ட இயேசு கனிவோடு வாசிக்கிறார்/. அழுகைக்கு ஆறுதல் கூறுவதுண்டு/. ஆனால் இங்கு/, அழுகையே ஆருதலாகின்றது/. கரிசனைக்கொண்ட ஆறுதல்/ எந்த வடிவில் வந்தாலும்/, மனம் அதனை மோப்பம் பிடித்து விடுகிறது/. ஆறுதல்/ துன்ப தடுப்பு அல்ல/, துயரக் கடலின் துணை நிற்கிற துடுப்பு/. எருசலேம் பெண்களால்/ அழ மட்டுமே முடிந்தது/. அழுகை ஆர்ப்பாட்டமாகப் புறப்பட்டால்/ பெண்மை பெருமை பெரும்/. பெண்ணே/ நீ / இனி கண்ணில் நீர் எழுதிப் பார்க்காதே/. அடிமைத்தனம் நீச்சல் கற்றுக்கொள்ளும்.. நீ/ விழிகளில் நெருப்பெழுதக் கற்றுக்கொள்.

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(9)**

விதை விழுந்தால் விருட்ச்சமாகும், மழை விழுந்தால் செழுமையாகும்
வீழ்ச்சி இல்லையே, வீரன் சோர்வதில்லையே

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

09. **ஒன்பதாம் பதிவு - இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகிறார்.**

நதி/ நடந்து போகின்றது/. குறுக்கே நிற்கும் மணல் மேடுகளையும்/, தடுக்கவரும் நாணல் நாற்றுகளையும்/, இடித்துக்கொண்டு/ இடம் பெயர்கிறது/. காலில் குத்திய முள்ளுக்காக/ பயணத்தை ஒத்திப்போடுபவர்/ இலக்கு இடத்தை அடைய இயலாது/. நீரோட்டமும், போராட்டமும்/ தொய்வில்லாமல் தொடரவேண்டும்/. முயற்சிகள் இல்லாவிட்டால்/, முயல்களும் ஆமையாகிவிடும்/. தடைகள் இல்லாவிட்டால்/ வாழ்வே விரக்தியாகிவிடும்/. விதை விழாமல்/ மரம் கண் விழிப்பதில்லை/. லட்ச்சியவாதி/ தடைகளைக்கண்டு சோர்ந்துவிடக்கூடாது/, என்பதை இயம்பிடத்தான்/ இயேசு/ விழுந்த இடத்திலிருந்து/ எழுந்து நடக்கிறார்/. மனிதர்களே/ உங்களை வீழ்த்தும் ஆயுதங்களை/, அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்/. குடிபழக்கம்/, போதைப்பொருள்/, சூதாட்டம்/, ஊதாரித்தனம்/, வெட்டிப்பேச்சு/, புறங்கூறல்/ இவையெல்லாம்/ உங்களை வீழ்த்திட கூட்டணி அமைத்துக்கொண்டிருக்கின்றன/. ஆனால்/ விழுந்தவர்களை எழுப்பிவிட/, முயர்ச்சியும்/ தன்னம்பிக்கையும் மட்டுமே உண்டு.

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(10)**

அகிலத்திற்கு ஆடைத் தந்தார், அவமானம் அணிந்துகொண்டார்
துகிலைப் பரித்திட்டார், ஈனர் துயரம் கொடுத்திட்டார்.

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

10. **பத்தாம் பதிவு - இயேசுவின் ஆடைகள் உரியபடுதல்**

ஆயக்கலைகளில்/ இன்னொன்றையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்/. அதுதான்/ அவமானங்களை சகித்துக்கொள்ளும் கலை/. அவமானங்களை சகிக்கக் கற்றுக்கொண்டால்/, உலகமும் பிரச்சினைகளும்/ ஒரு பொருட்டே இல்லை/. முள்முடி/, கசையடி/, வசைமொழி/ இவை எல்லாவற்றையும்விட/, இயேசுவுக்கு அதிக வேதனையை உருவாக்கியது/, அவரது ஆடைகளை பரித்தபோதுதான்/. ஆடை இல்லாமல்/ ஆளுக்கு மதிப்பில்லை/. ஆளில்லாமல்/ ஆடைக்கும் சிறப்பில்லை/. எனவேதான்/ ஆள்பாதி/ ஆடைபாதி/ என்கிறார்கள்/. கொலையைவிடக் கொடியது/ அவமானம்/. அடுத்தவருக்கு அவமானம் நேர்ந்தால்/, தனது மானம் காக்கப்படும் என்று நினைப்பது/ ஒருவித மனநோய்/. இந்த மனநோயாளிகள்/ அடுத்தவர்களை அவமானப்படுத்தி/ தமக்கு பெருமை சேர்க்க முயல்கிறார்கள்/. இயேசுவின் ஆடையை அவிழ்த்து/ அவமானப்படுத்தியது/ அன்றைய அதிகாரக் கூட்டம்/. இன்று/ ஆடையை கட்டி/ அவமானப்படுத்துகிறார்கள்/. வாழ் முளைத்த வதந்திகளை/ கால் முளைத்த

கற்பனைகளால் கட்டி/ நேர்மையாளர்களின் மீது அணிகிறார்கள்/. கருவண்டு அமர்வதால்/ வெள்ளை சுவருக்கு சேதாரம் இல்லையே/. எச்சில் ஈரத்தில்லா/ தங்கம் துருபிடிக்கப்போகிறது ?

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(11)**

திருப்பி அறைதல் குற்றம் என்றார், திரும்பி கன்னம் காட்டச்சொன்னார்
அமைதி பரவவே, வேடர் அறைந்துவிட்டாரே

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

## 11. **பதினோராம் பதிவு - இயேசு சிலுவையில் அறையப்படுதல்**

எளியவர் ஏற்றம் பெற/ தன்னை ஏணியாக்கியவர்/, ஆணிகளால் அறைபட்டு நிற்கிறார்/. வன்முறையே கூடாது என்றவரை//, வன்முறை வளைத்துக்கொண்டது/. அமைதி புறாக்களை/ உலகம் சிதைத்து/, வதைத்து/ சித்திரவதை செய்து/ கொண்றுவிடுகிறது/. வாழ்நாளில் வாழெடுக்காத இந்த முள்முடி மன்னர்/ காயப்பட்டதால் வரலாறே காயப்பட்டது/. கண்ணுக்குப் புலப்படாத ஊர்ந்து போகிற எறும்புக்குக்கூட/ வாழ்கிற உரிமை உண்டு/. கருத்துக்களுக்கும் மறுத்துரைக்க இயலாதவர்கள்/ எப்போதும் நாடுவது வன்முறை/. பூமியின் அழுக்கை சலவை செய்ய வந்த சமூகவாதிகளை/ உலகத்திலே வைக்கக் கூடாது என்கிற வன்முறை வாய்ப்பாட்டுக்கு/ இனி முற்றுப்புள்ளி வைக்க வேண்டாமா?/ ஆயுதம்/ தமிழ் எழுத்தில் மட்டும் போதும்/. வாழ்வில் வேண்டாம்/. வாழ்விக்கும் வான்மழை போதும்/, வாழ்வை குழைக்கும் குண்டு மழை வேண்டாம்/. வறியோரை வலியோர் வதைக்கலாம் என்கிற/ வக்கிர சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைப்போம்/. இந்த செம்மறியின் ரத்தத்தில்/ பூமி/ தம்மை சுத்தம் செய்து கொள்ளட்டும்.

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(12)**

நண்பருக்காய் உயிர் தருதல், உலகினிலே உயர்ந்ததென்றார்
உலகம் பிடித்திட, இயேசு உயிர்கொடுத்தாரே

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்

இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

## 12. பன்னிரெண்டாம் பதிவு - இயேசு உயிர் நீத்தல்

மரணம்/, மனித வாழ்வில்/ அதிர்வுகளை ஏற்படுத்தும் ஆற்றல் பெற்றது/. உடலில் பழுதான உறுப்புகளை மாற்றுகிற அளவிற்கு/ அறிவியல் வளர்ந்திருக்கிறது/. பிரிந்து போன உயிருக்கு பதிலாய்/ மாற்று உயிர் பொருத்துகிற வித்தையை/ மனிதன் இன்னமும்/ கண்டிடவில்லை/. உயிருக்கு மாற்று இல்லைதான்/, ஆனால் லட்சிய வீரர்/ உயிருக்கு மாற்றாய்/, கொள்கையை நேசிக்கிறார்/. உயிரை விற்று/ கொள்கையை வாங்குகிறார்/. சிலருக்கு சாவில் தள்ளுபடி வாழ்வாகவும்/, வாழ்வோ மலிவு விலை சாவாகவும் ஆகிவிட்டது/. ஏசுவுக்கு உயிரை விட/, லட்சியம் பெரிதாக தெரிந்தது/. போராளியின் மரணத்தில்/ போராட்டம் வெற்றி பெரும் என்பது/ வரலாறு சொல்லுகிற பாடம்/. உடலை கொள்ளுகிரவர்களால்/ ஆன்மாவை அசைக்கக்கூட முடியாது/. கொள்கை உடையவர்/ கொஞ்சகாலம்தான் உயிர் வாழ்வர்/. கோழைக்கு மரணம்/ தவணை முறையில் வருகிறது/. வாழ்ந்த நாட்கள் அல்ல வரலாறு/, வாழ்ந்த முறையே வரலாறு/. முப்பத்து மூன்று ஆண்டில்/ தன் மூச்சை முடித்துக்கொண்ட இயேசு/ இரண்டாயிரம் ஆண்டுகளாய்/ இன்னமும் உயிர் வாழ்வது/ மரணம் அவரை வெற்றி கொள்ளவில்லை/ என்பதன் அர்த்தம்தானே?

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(13)**

அன்னைமடித்தொட்டில் கட்ட கண்ணீர் துளி மெட்டுகட்ட
இறுதி தாலாட்டு இது மீட்பின் தாலாட்டு

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ?

## 13. பதிமூன்றாம் பதிவு - இயேசுவின் உடல் மரியன்னையின் மடியில்

அம்மாவுக்கும், பிள்ளைக்கும்/ அப்படி ஒரு உறவு/. பூமி புரிந்துகொள்ள முடியாத உறவு/. தொப்புள் கொடியில் தொடங்கிய பந்தம்/ முடிவே இல்லாமல் தொடர்கிறது/. இந்த உறவிற்கு மட்டும் தான்/ முற்றுபுள்ளி இருப்பதில்லை/. மரித்த நிலையிலும்/ இயேசுவை மடியில் கிடத்துவது/ அன்னை மரியாளுக்கு ஆனந்தமாய் இருந்தது/. உயிரை காத்திட/ கொள்கைகளை விட்டுகொடுக்கும்/ கோழை மகனை/ இவர் பெறவில்லையே!/ வானத்து மடியில் கிடக்கும் நிலவைப்போல/ இயேசு மரியாளின் மடியில் தலைசாய்த்திருக்கிறார்/. அம்மாவின் மடிக்கு ஈடாக/ உலகில் எந்த இடமும் இல்லை/. அவள் பாடுகிற தாலாட்டுக்கு இணையான பாட்டை/ யாரும் இசைத்திட இயலாது/. குழந்தை வயிற்றில் இருக்கும்போதும்/, உலகில் நடமாடுகிறபோதும்/

ஒன்றாகவே நினைத்து/ தன் நெஞ்சிலே சுமக்கிற பெருமாட்டி/. அம்மாவை/ பிள்ளைகள் மறந்துபோவார்கள்/, ஆனால்/ அம்மாவுக்கோ தூக்கத்திலும் கூட/ பிள்ளைகளின் நினைவே/ விழிவாசல் ஓரம் விழித்திருக்கிறது/. அவள் ரத்தத்தை பாலக பருகிய குழந்தைகள்/, வயோதிக காலத்தில் அவளை ஒதுக்கிவிடுகிரார்கள்/. மனைவி கணவனை விவகாரத்து செய்துவிடலாம்/. ஆனால்/ தாய் ஒருபோதும் தன் பிள்ளையை/ உதறிவிடுவதில்லை/. அம்மா/, அவள் இரக்கத்தின் கவிதை.

எங்கள் பேரில் தயவாயிரும் இயேசுவே
எங்கள் பேரில் தயவாயிரும்
மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள்
இறைவனுடைய இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறக்கடவன.

**(14)**

மாளிகையில் பிறந்தாலும், மன்குடிலில் தவழ்ந்தாலும்
சமத்துவமேதான் மண்ணில் ஆறடியேதான்

இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய் |
இயேசுவே நீ எனக்காக சிலுவையை சுமக்க வேண்டுமா ? | - 2
உனது பாத பதிவுகள், எனது வாழ்வின் வேதங்கள்
உனது பாத பதிவுகள், எனது வாழ்வின் வேதங்கள்
**இயேசுவே நீ எதற்காக சிலுவையை சுமந்து போகிறாய்**

14. **பதினான்காம் பதிவு - இயேசுவின் உடல் கல்லறையில்**

கல்லறை/, இது/ காலம் வழங்குகிற கல்வி அறை/. ஆறடி நிலப்பரப்பில்/ அமைந்துவிடுகிற சமத்துவக்கூடம்/. உலகத்தை உள்ளங்கைக்குள் அடக்கியவர்களும்/ இங்கேதான் அடங்கிபோகிறார்கள்/. உள்ளங்கை அளவிற்குகூட உட்கார இடம் இல்லாமல்/, தெருகோடியில் நின்றவர்களும்/ இங்கேதான் இடம்பிடித்தார்கள்/. இந்த உலகம்/ வந்துபோகிறவர்களின் யாத்திரைத்தளம்/. நிரந்தரம் என்று நினைத்துக்கொண்டு/ செல்வம் சேர்ப்பதையே வாழ்வென்று எண்ணியவர்கள்/ கல்லறைகளில் அடங்கிபோனார்கள்/. நகைகளை இரவல் வாங்குகிற உலகில்/, கல்லறையை இரவல் வாங்கியவர் இயேசு/. தடாகத்தாமரை இலையில்/, ஒட்டாமல் ஓடுகிற தண்ணீர் துளிகளைப்போல/ வாழ்பவர்களின் கல்லறைகளுக்குக்கூட இதயத்துடிப்பிருக்கும்/. மனித நாடகத்தில்/ கல்லறை கடைசிக்காட்சி/. நாடகத்தை முடித்துக்கொண்டு/ யதார்த்த வாழ்விற்கு திரும்புகிறவர்களை/, இந்த கடைசிகாட்சிக் கட்டிப்போடமுடியாது/. முட்டை ஓட்டை எட்டி உதைத்துக்கொண்டு/ வெளியே எட்டிப்பார்க்கிற கோழிகுஞ்சிக்கு/ ஓடு தேவையில்லையே!

கரன்சி நோட்டை எண்ணிப்பார்க்கிற சில மனிதர்களுக்கு/, தங்கள் வாழ்க்கையை/ ஒருமுறையேனும் எண்ணிப்பார்க்கிற நினைப்பே வருவதில்லை/. விரல்களை விற்று

மோதிரம் வாங்கி/ பழகிவிட்ட இவர்கள்/, வீணைகளை கூட விரகாக்கிவிடுகிரார்கள்/. மனிதர்களே/ உங்கள் கல்லறைகளுக்குக்கூட/ உயிர் துடிப்பிருக்கவேண்டும்